**கவனிக்க.-** *04.04.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) , பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1858 - 2014 අප්‍රේල් මස 11 වැනි සිකුරාදා - 2014.04.11

*1858 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 602 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 605 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 610 |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2014, மே மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

***பீ. எச். எல். வீ. டீ சில்வா,***
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் — வெற்றிடம்

**பன்வில - பிரதேச சபை**

*மத்திய மாகாண அரச சேவையில் வெற்றிடங்களை நிரப்புதல் - 2014*

*மத்திய மாகாண அரச சேவையில் பன்வில பிரதேச சபையில் நிலவும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள பதவிகளின் ஆட்சேர்ப்புக்காக அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்ட பன்வில பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் காணப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயார் செய்யப்பட்ட விண்ணப்பப்பத்திரம் 2014.04.25 ஆந் திகதிக்கு முன்னதாக "செயலாளர், பன்வில பிரதேச சபை, பன்வில" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.*

| தொடர் இலக்கம் | பதவியின் பெயர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் |
|---|---|---|---|---|
| 1 | வீதித் தொழிலாளர் தரம் III | 01 | 6/2006 (IV)-PL I<br>ரூ. 11,730-10 × 120-10 × 130-10 × 145-12 × 160 - ரூபா 17,600 | **கல்வித் தகைமைகள் :**<br>ஆகக் குறைந்தது எட்டாம் தரத்திற்கு (9 ஆம் வகுப்பிற்கு) உரிய பாடத்திட்டத்தை நிறைவு செய்திருத்தல் வேண்டும். |
| 2 | வாகான சாரதி தரம் III | 02 | 6/2006 (IV)-PL 3-<br>ரூ. 12,470-130 × 10-145 × 10-160 × 10-170 × 12 -ரூபா 18,860 | **கல்வித் தகைமைகள் :**<br>* க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விச் சான்றிதழ் பரீட்சையில் (சா.த) இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட குறைந்தது ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>* மோட்டார் வாகன ஆணையாளர் வழங்கிய தேர்ச்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல் (மோட்டார் கோச் பார ஊர்தி அனுமதிப்பத்திரம்) அல்லது<br>C- லொறி<br>CI- பல் தேவை வாகனம்<br>D-பேருந்து<br>DI- வேன்<br>G- டிரெக்டர்<br>செலுத்துவதற்கான தகுதி தொடர்பான அனுமதிப்பத்திரத்தை பெற்றிருத்தல் வேண்டும்.<br>மற்றும்<br>* பகல், இரவு காலங்களில் சேவையில் ஈடுபடுவதற்குரிய உடல் நிலையைக் கொண்டிருத்தல், சிறந்த கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.<br>* ஆகக் குறைந்தது 5 அடி 2 1/2 அங்குல உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.<br>* வீதி, விதிக்கோவை தொடர்பான பூரண அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும். |
| 3 | நூல் நிலைய உதவியாளர் தரம் III | 01 | 6/2006 (IV)-PL1 2006A<br>ரூ. 11,730-10 × 120-10 × 130-10 × 145-12 × 160 -ரூபா 17,600 | **கல்வித் தகைமைகள் :**<br>க. பொ. த. (சா.த.) பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட குறைந்த பட்சம் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |

2 . **ஆட்சேர்ப்புக்கான பொது நிபந்தனைகள்.**- (1) விண்ணப்பதாரிகள் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) விண்ணப்பதாரி பன்வில பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் நிரந்தர வதிவைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேக ஆரோக்கியம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

(4) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல்வேண்டும்.(தற்போது அரச/மாகாண அரச சேவையின் கீழ் நிரந்தர சேவையில் உள்ளோருக்கு இந்த வயதெல்லை பொருந்தாது.)

(5) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டு தண்டிக்கப்பட்டவராகவோ அரச அல்லது மாகாண அரச சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டவராகவோ இருத்தல் கூடாது.

(6) பன்வில பிரதேச சபையில் தற்போது தற்காலிக, சமயோசித பதிலீட்டு,ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவோர் மீது விசேட கவனம் செலுத்தப்படும்.

3. **ஆட்சேர்ப்பு முறை** .- (1) விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சை ஒன்றுக்கு உட்படுத்தப்பட்டு தகைமைகள் பரிசீலிக்கப்பட்ட பின்னர் ஆட்சேர்ப்பு நடைபெறும் ;

(2) வாகன ஓட்டுநர் பதவிக்காக திணைக்களத்திலிருந்து ஒரு பிரதிநிதி, வாகனப் போக்குவரத்து பொலிஸ் பிரிவின் அலுவலர் ஒருவர் ஆகியோரைக் கொண்ட குழுவினால் மேற்கொள்ளப்படும் வாகனம் செலுத்தும் தேர்ச்சியை அளவிடும் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையொன்றிலும் சித்தியடைதல் வேண்டும்.

4. **சேவையில் ஈடுபடுத்தப்படும் நிபந்தனைகள்** .- (1) இப்பதவி நிரந்தரமானதும். ஓய்வூதியம் கொண்டதும் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்;

(2) தெரிவுசெய்யப்படுவோர் மூன்று வருடகால தகுதிகாண் சேவைக்கு உட்படுவதுடன் உயர்ச்சி பெறுவோர் ஒரு வருட சேவைப் பரிசோதனைக் காலத்திற்கு உட்படுவார்;

(3) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் தாபனக் கோவை நிபந்தனைகளுக்கும் நிதிப் பிரமாணங்களுக்கும் அரச திணைக்களங்களது கட்டளைகளுக்கும் மத்திய மாகாண சபை அல்லது பன்வில பிரதேச சபை காலத்திற்குக் காலம் விதிக்கும் நியமங்களுக்கும் அமைய செயற்படுவதற்கு உட்படுதல் வேண்டும்;

(4) இந்த ஆட்சேர்ப்பின்படி இவ்விதிமுறைகளையும் கருத்தில் கொள்ளாத காரணங்கள் பற்றி பன்வில பிரதேச சபை செயலாளர் தீர்மானமே இறுதி தீர்மானம் ஆகும்;

(5) தற்போது அரச சேவையில் இருக்கும் விண்ணப்பதாரிகள் தமது திணைக்களத்தின் பிரதானியினுாடாக விண்ணப்பிக்க வேண்டும்;

(6) தேவையான பிணை வைப்புத் தொகையைப் பணமாகவோ அல்லது விதிக்கப்படும் வேறு வகையிலான அவற்றை பிரதேச சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்;

(7) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது அதற்கிடையில் இந்த ஆட்சேர்ப்பைத் தாமதப்படுத்தும் மாற்றியமைக்கும் அல்லது அறிவிப்பை திருத்தும் இரத்து செய்யும் அனைத்து அதிகாரங்களும் பன்வில பிரதேச சபை செயலாளருக்கு உண்டு.

5. **விண்ணப்பப்படிவத்துடன் இணைக்க வேண்டிய ஆவணங்கள்** .- விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களது உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை அனுப்பி வைத்தல் வேண்டும். நேர்முகப் பரீட்சையின்போது அவற்றின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும் :-

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) கல்வி தகைமைச் சான்றிதழ்கள் ;
(3) பிரதேச செயலாளர் உறுதிப்படுத்திய வதிவிடச் சான்றிதழ் ;
(4) அண்மையில் பெறப்பட்ட இரண்டு குணநலச் சான்றிதழ்கள் ( ஒன்று கிராம அலுவலரால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்);
(5) சேவைச் சான்றிதழ்கள் (தற்போது அரச சேவையில் பணியாற்றுவோர் மாத்திரம்).

தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புகளில் பொருள் மயக்கம் ஏற்பட்டால் சிங்கள மொழி அர்த்தம் முன்னிலை வகிக்கும்.

செயலாளர்,
பன்வில பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பன்விலை,
2014, மார்ச் 24.

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

**பன்வில பிரதேச சபை**

*மத்திய மாகாண அரச சேவையின் .................... பதவிக்கான விண்ணப்பம்*

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :----.
2. நிரந்தர முகவரி :----.
3. நிரந்தர வதிவிட மாவட்டம் :----.
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
5. பிறந்த திகதி :----.
   ஆண்டு :----, மாதம்:----, திகதி :----.
6. விண்ணப்பிக்கும் கடைசித் திகதியன்று வயது :
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
7. பால் (ஆண்/பெண்) :----.
8. விவாகமானவரா? விவாகமாகாதவரா? :----.
9. வம்சாவழியினாலா அல்லது பதிவினாலா இலங்கைப் பிரசை :----.
10. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களது பிரதிகளை இணைக்க)
    க. பொ. த. (சா. த.) :-

    தோற்றிய வருடம் :-----.　　　　சுட்டிலக்கம் :----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| 1. | | 5. | |
| 2. | | 6. | |
| 3. | | 7. | |
| 4. | | 8. | |

11. (1) ஏனைய கல்வித் தகைமைகள் :----.
    (2) தொழில் தகைமைகள் :----.
    (3) சேவை அனுபவம் :----.

12. ஏற்கனவே இந்தப் பிரதேச சபையில் பணியாற்றுபவராயின் வகிக்கும் பதவி :-----.
    நிரந்தர/சமயோசித/தற்காலிக/ஒப்பந்த/பதிலீட்டு அடிப்படை :----.
    பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.

13. நீங்கள் எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீர்களா ? :-----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்கள் அனைத்தும் என் அறிவுக்கு எட்டிய வரையில் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதிமொழிகின்றேன்.மேற்குறித்த தகவல்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால், நியமனத்திற்கு முன்னரெனில் தகுதியற்றவராக ஆக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனில் நட்டஈடின்றிச் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் அறிவேன்.

---------------------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----

**அரச சேவையில் உள்ளோருக்கான நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./திருமதி/ செல்வி ......................................... என்பவர் இந்த நிறுவனத்தில்.....................................ஆகப் பணியாற்றுகின்றார். குறித்த பதவிக்கென அவர் தெரிவுசெய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும்/ முடியாது. அவர் எவ்விதமான தண்டனைக்கும் உட்பட்டவரல்ல என்பதை உறுதிப்படுத்தி அவரது விண்ணப்பத்தை விதந்துரைத்து முன்வைக்கின்றேன்.

---------------------,
நிறுவனத் தலைவரது கையொப்பம்.

பெயர் :-----.
பதவி :-----.
திணைக்களம்/ நிறுவனம் :-----.
(பதவி முத்திரையை இடவும்)
திகதி :-----.

*4-299*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## பிங்கிரிய பிரதேச சபை

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது தனியார் மயான சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உட் பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

குருநாகல் மாவட்டம், பிங்கிரிய பிரதேச சபை நிருவாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள கீழே உப அட்டவணையில் விபரிக்கப்படும் காணி 1989 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் படி II ஆம் உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படக்கூடிய 57 ஆம் இலக்க 1946 ஆம் ஆண்டின் பொது, தனியார் மயானங்கள் சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் விதியின் கீழ் மாகாண சபையின் உள்ளூராட்சி மன்ற விவகாரங்களுக்குப் பொறுப்பான அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி இறந்தவர்களின் பூதவுடல்களை புதைப்பதற்கோ தகனம் செய்வதற்கோ பொது மயானமொன்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாக வடமேல் மாகாண மாகாண சபையின் முதல் அமைச்சரும் உள்ளூராட்சி சபை விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சருமான ஜே.பி. தயாசிறி பத்மகுமார ஜயசேகரவாகிய என்னால் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஜே. பி. தயாசேகர பத்மகுமார ஜயசேகர,
முதல் அமைச்சரும் உள்ளூராட்சி
சபை விவகாரங்களுக்குப்
பொறுப்பான அமைச்சரும் ,
வடமேல் மாகாண மாகாண சபை.

முதல் அமைச்சர் அலுவலகம் ,
குருநாகல்,
2014 , பெப்புருவரி 26.

## பிங்கிரிய பிரதேச சபை

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயான, தனியார் மயான சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உட் பிரிவின் படி பானவெவ மயானத்தைப் பற்றிய அறிவித்தல்*

பிங்கிரிய பிரதேச சபையின் அதிகார எல்லை வரம்புக்குட்பட்ட பானவெவ கிராமத்தில் அமைந்துள்ளதும் இ.கி.நி.அ.ப. இல. 1451 களத்தால் 01 இல் விபரிக்கப்பட்டதுமான துண்டு 49 இல் குறிக்கப்படும் கோன்கஹஹேன மயானத்தின் விபரம்.

### அட்டவணை

இடம் அமைந்துள்ள பிரதேச சபை செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராம அலுவலர் பிரிவு:- 1464 பானவெவ
கிராமம்:- பானவெவ
இடத்தின் பெயர்:- கோன்கஹஹேன
எல்லைகள்:-
வடக்கே : பாதுகாக்கப்பட்ட இடம்/வனம்
கிழக்கே : 47 ஆம் இலக்க காணித்துண்டு
தெற்கே : 47 ஆம் இலக்க காணித்துண்டு
மேற்கே : பாதை நீட்டிலும் காணப்படும் காடு/இடம்
பரப்பளவு: 3றூட் 36 பேர்ச்சர்ஸ் ஹெக்டயார் நிலப்பரப்பு

## பிங்கிரிய பிரதேச சபை

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க இடுகாடு சுடுகாடுகள், கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் கரவ்வெவ மயானத்தைப் பற்றிய அறிவித்தல்*

பிங்கிரிய பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் கரவ்வெவ கிராமத்தில் இ.கி.வ.2003 பக்க 12-1 இல் கரவ்வெவ மினிபிடிய எனும் காணியின் காணித்துண்டு இலக்கம் 47.

### அட்டவணை

காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராம அலுவலர் பிரிவு:- 1477 கந்துறுவெவ
கிராமம்:- கரவ்வெவ
காணியின் பெயர்:- கரவ்வெவ மினிபிடிய
எல்லைகள்:-
வடக்கே : காணித்துண்டு இலக்கம் 18
கிழக்கே : T.P.396974
தெற்கே : ஒதுக்குப் பிரதேசம் 144 மற்றும் T.P. 396946
மேற்கே : காணித்துண்டு இலக்கம் 18 A
காணியின் விஸ்தீரணம்: 1றூட் 37 பேர்ச்சர்ஸ் கொண்ட பூமிப் பிரதேசம்

## பிங்கிரிய பிரதேச சபை

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயான, தனியார் மயான சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உட் பிரிவின்படி இ/கடிகமுவ மயானத்தைப் பற்றிய அறிவித்தல்*

பிங்கிரிய பிரதேச சபையின் அதிகார எல்லை வரம்புக்குட்பட்ட இ/கடி கமுவ கிராமத்தில் அமைந்துள்ளதும் இ.கி.நி.அ.ப. இல. 2139 களத்தால் 12-2 இல் விபரிக்கப்பட்டதுமான துண்டு 105 இல் குறிக்கப்படும் மயானத்தின் விபரம்.

### அட்டவணை

இடம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராம அலுவலர் பிரிவு:- 1480 இ/கடிகமுவ
கிராமம்:-இ/கடிகமுவ
இடத்தின் பெயர்:- மயானம்
எல்லைகள்:-
வடக்கே : T.P. 395611
கிழக்கே : T.P. 419097
தெற்கே : 419097 வகிக்கும் இடம்
மேற்கே : பாதை
பரப்பளவு: 1றூட் 37 பேர்ச்சர்ஸ் ஹெக்டயார் நிலப்பரப்பு

## பிங்கிரிய பிரதேச சபை

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க இடுகாடு சுடுகாடுகள், கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் பிரிவின் பிரகாரம் கெடுலாவை மயானத்தைப் பற்றிய அறிவித்தல்*

பிங்கிரிய பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் கெடுலாவை கிராமத்தில் இ.கி.வ.1382 பக்க இலக்கம் 01 இல் மினிபிடிய எனும் காணியின் காணித்துண்டு இலக்கம் 01 F.

**அட்டவணை**

காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராம அலுவலர் பிரிவு:- 1456 கெடுலாவை
கிராமம்:- கெடுலாவை
காணியின் பெயர்:- கெடுலாவை மினிபிடிய
எல்லைகள்:-
வடக்கே : காணித்துண்டு இலக்கங்கள் 28 D மற்றும் 28 A
கிழக்கே : காணித்துண்டு இலக்கம் 28 L
தெற்கே : காணித்துண்டு இலக்கம் 29
மேற்கே : காணித்துண்டு இலக்கங்கள் 8D மற்றும் 28 A
காணியின் விஸ்தீரணம் : 0.089 ஹெக்டயார் கொண்ட நிலப் பிரதேசம்

**பிங்கிரிய பிரதேச சபை**

1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க இடுகாடு சுடுகாடுகள், கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் இ/தலம்பொல மயானத்தைப் பற்றிய அறிவித்தல்

பிங்கிரிய பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் இ/ தலம்பொல கிராமத்தில் இ.கி.வ.1389 பக்க 19 இல் பின்கும்புரஹேன மற்றும் மயான பூமிப்பிரதேசம் எனும் காணியின் காணித்துண்டு இலக்கம் 105.

**அட்டவணை**

காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராம அலுவலர் பிரிவு:- 1448 இ/கோண்கதவளை
கிராமம்:- இ/தலம்பொல
காணியின் பெயர்:- பின்கும்புரஹேன மற்றும் மயான பூமிப்பிரதேசம்
எல்லைகள்:-
வடக்கே : காணித்துண்டு இலக்கம் 104
கிழக்கே : காணித்துண்டு இல. 104 மற்றும் இ.கி.வ. 1386 காணி எல்லை மற்றும் 106
தெற்கே : இ.கி.வ. 1386 கிரிந்தேகம காணி எல்லை மற்றும் காணித் துண்டு இலக்கம் 106
மேற்கே : காணித்துண்டு இலக்கம் 97
காணியின் விஸ்தீரணம்: 0.219 ஹெக்டயார் கொண்ட நிலப்பிரதேசம்

**பிங்கிரிய பிரதேச சபை**

1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயான, தனியார் மயான சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உட் பிரிவின் படி ஹபவெவ மயானத்தைப் பற்றிய அறிவித்தல்

பிங்கிரிய பிரதேச சபையின் அதிகார எல்லை வரம்புக்குட்பட்ட ஹபவெவ கிராமத்தில் அமைந்துள்ளதும் இ.கி.நி.அ.ப. இல. 1460 களத்தால் 01 இல் விபரிக்கப்பட்டதுமான துண்டு 07 இல் குறிக்கப்படும் திம்பிரிகஹகொட்டுவ மயானத்தின் விபரம்.

**அட்டவணை**

இடம் அமைந்துள்ள பிரதேச சபை செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராம அலுவலர் பிரிவு:- 1438 குடகலவ
கிராமம்:-ஹபவெவ
இடத்தின் பெயர்:- திம்பிரிகஹகொட்டுவ
எல்லைகள்:-
வடக்கு : காணித்துண்டு இல. 06
கிழக்கு : காணித்துண்டு இல. 06ஏ உம் பிரதான பாதையும்
தெற்கு : 06 ஏ, உம் 06 உம்
மேற்கு : இ.கி.நி.அ.ப.இல.1461 ஹல்மில்லவெவ கிராம எல்லையும் இல. 7 உம்
பரப்பளவு: 0.132 ஹெக்டயார் நிலப்பரப்பு

**பிங்கிரிய பிரதேச சபை**

1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயான, தனியார் மயான சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உட் பிரிவின் படி ஹல்மில்லவெவ மயானத்தைப் பற்றிய அறிவித்தல்

பிங்கிரிய பிரதேச சபையின் அதிகார எல்லை வரம்புக்குட்பட்ட ஹல்மில்லவெவ கிராமத்தில் அமைந்துள்ளதும் இ.கி.நி.அ.ப. இல. 1461 களத்தால் 01 இல் விபரிக்கப்பட்டதுமான துண்டு 03 இல் குறிக்கப்படும் கோன்கஹகொட்டுவ மயானத்தின் விபரம்.

**அட்டவணை**

இடம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராமஅலுவலர் பிரிவு:- 1438 குடகலவ
கிராமம்:-ஹல்மில்லவெவ
இடத்தின் பெயர்:- கோன்கஹகொட்டுவ
எல்லைகள்:-
வடக்கு : காணித்துண்டு இல. 01 எச்
கிழக்கு : காணித்துண்டு இல. ஹபவெவ
தெற்கு : காணித்துண்டு இலக்கப் பாதை
மேற்கு : காணித்துண்டு இல. 01 ஐ, 01 எச்
பரப்பளவு: 0.114 ஹெக்டயார் நிலப்பரப்பு

**பிங்கிரிய பிரதேச சபை**

1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயான, தனியார் மயான சட்டத்தின் 11 ஆம் அத்தியாய 5(1) ஆம் உட் பிரிவின் படி கஹவல மயானத்தைப் பற்றிய அறிவித்தல்

பிங்கிரிய பிரதேச சபையின் அதிகார எல்லை வரம்புக்குட்பட்ட கஹவல கிராமத்தில் அமைந்துள்ளதும் இ.கி.நி.அ.ப. இல.2014 களத்தால் 01 இல் விபரிக்கப்பட்டதுமான துண்டு 04 இல் குறிக்கப்படும் பலுகஹபிட்டிய மயானத்தின் விபரம்.

**அட்டவணை**

இடம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராம அலுவலர் பிரிவு:- 1468 வெல்லராவ
கிராமம்:-கஹவல
இடத்தின் பெயர்:- பலுகஹபிட்டிய
எல்லைகள்:-
வடக்கு : காணித்துண்டு இல. 01
கிழக்கு : காணித்துண்டு இல. 05
தெற்கு : 06 உம், 03 ம்
மேற்கு : காணித்துண்டு இல. 03 உம், 02 ம்
பரப்பளவு: 0.293 ஹெக்டயார் நிலப்பரப்பு

### பிங்கிரிய பிரதேச சபை

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயான, தனியார் மயான சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உட் பிரிவின் படி இ/கரம்பே மயானத்தைப் பற்றிய அறிவித்தல்*

பிங்கிரிய பிரதேச சபையின் அதிகார எல்லை வரம்புக்குட்பட்ட இ/கரம்பே கிராமத்தில் அமைந்துள்ளதும் இ.கி.நி.அ.ப. இல. 1409 களத்தால் 03 இல் விபரிக்கப்பட்டதுமான துண்டு 03 இல் குறிக்கப்படும் ஹீன்மொறகொள்ள கெளே மயானத்தின் விபரம்.

#### அட்டவணை

இடம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராம அலுவலர் பிரிவு:- 1442 கோசாகம
கிராமம்:-இ/ கரம்பே
இடத்தின் பெயர்:- ஹீன்மொரகொல்ல கெளே
எல்லைகள்:-
வடக்கு : காணித்துண்டு இல. 03 ஏ
கிழக்கு : காணித்துண்டு இல. 03
தெற்கு : 03 எப்
மேற்கு : காணித்துண்டு இல. 03எப்
பரப்பளவு: 0.227 ஹெக்டயார் நிலப்பரப்பு

### பிங்கிரிய பிரதேச சபை

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயான, தனியார் மயான சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உட் பிரிவின் படி கோன்வெட்டிய மயானத்தைப் பற்றிய அறிவித்தல்*

பிங்கிரிய பிரதேச சபையின் அதிகார எல்லை வரம்புக்குட்பட்ட கோன்வெட்டிய கிராமத்தில் அமைந்துள்ளதும் இ.கி.நி.அ.ப. இல. 2126 களத்தால் 01 இல் விபரிக்கப்பட்டதுமான துண்டு 11 இல் குறிக்கப்படும் கோன்வெட்டிய மயானத்தின் விபரம்.

#### அட்டவணை

இடம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராம அலுவலர் பிரிவு:- 1437 மெலதெனிய
கிராமம்:-கோன்வெட்டிய
இடத்தின் பெயர்:- கோன்கஹமுள மயானம்
எல்லைகள்:-
வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 6 சீ,6 ஏ,12 ம்
கிழக்கு : காணித்துண்டு இல. 12ம் இ.கி.நி.அ.ப.இல.2125 மெலதெனிய கிராம குடியிருப்பு
தெற்கு : காணித்துண்டு இ.கி.நி.அ.ப.இல.2125 மெலதெனிய கிராம குடியிருப்பு
மேற்கு : காணித்துண்டு இல. 08
பரப்பளவு: 0.220 ஹெக்டயார் நிலப்பரப்பு

### பிங்கிரிய பிரதேச சபை

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயான, தனியார் மயான சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உட் பிரிவின் படி பக்மீறுப்ப மயானத்தைப் பற்றிய அறிவித்தல்*

பிங்கிரிய பிரதேச சபையின் அதிகார எல்லை வரம்புக்குட்பட்ட பக்மீறுப்ப கிராமத்தில் அமைந்துள்ளதும் இ.கி.நி.அ.ப. இல. 2012 களத்தால் 02 இல் விபரிக்கப்பட்டதுமான துண்டு 67 இல் குறிக்கப்படும் மயானத்தின் விபரம்.

#### அட்டவணை

இடம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராம அலுவலர் பிரிவு:- 1469 பக்மீறுப்ப
கிராமம்:-பக்மீறுப்ப
இடத்தின் பெயர்:- மில்லகஹஹேன
எல்லைகள்:-
வடக்கு : காணித்துண்டு இல.66
கிழக்கு : காணித்துண்டு இல. 65ம், 68 ம்
தெற்கு : காணித்துண்டு இல. 78
மேற்கு : காணித்துண்டு இல. 62ம், 66ம்
பரப்பளவு: 0.417 ஹெக்டயார் நிலப்பரப்பு

### பிங்கிரிய பிரதேச சபை

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயான, தனியார் மயான சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உட் பிரிவின் படி ப/தலம்பொள மயானத்தைப் பற்றிய அறிவித்தல்*

பிங்கிரிய பிரதேச சபையின் அதிகார எல்லை வரம்புக்குட்பட்ட ப/ தலம் பொள கிராமத்தில் அமைந்துள்ளதும் இ.கி.நி.அ.ப. இல. 1392 களத்தால் 10 இல் விபரிக்கப்பட்டதுமான துண்டு 24 இல் குறிக்கப்படும் வெவகாவ ஹேன்யாய மயானத்தின் விபரம்.

#### அட்டவணை

இடம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராம அலுவலர் பிரிவு:- 1446 ப/தலம்பொள
கிராமம்:-ப/ தலம்பொள
இடத்தின் பெயர்:- வெவகாவ ஹேன்யாய
எல்லைகள்:-
வடக்கு : காணித்துண்டு இல.50
கிழக்கு : காணித்துண்டு இல.162
தெற்கு : காணித்துண்டு இல. 162
மேற்கு : காணித்துண்டு இல. 163
பரப்பளவு: 0.223 ஹெக்டயார் நிலப்பரப்பு

### பிங்கிரிய பிரதேச சபை

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயான, தனியார் மயான சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உட் பிரிவின் படி மகுல்லபொகுன மயானத்தைப் பற்றிய அறிவித்தல்*

பிங்கிரிய பிரதேச சபையின் அதிகார எல்லை வரம்புக்குட்பட்ட மகுல்லபொகுன கிராமத்தில் அமைந்துள்ளதும் இ.கி.நி.அ.ப. இல. 1402 களத்தால் 02 இல் விபரிக்கப்பட்டதுமான துண்டு 19 ஐ, இல. 02 ஆல் குறிக்கப்படும் மகுல்லபொகுன மயானத்தின் விபரம்.

#### அட்டவணை

இடம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராம அலுவலர் பிரிவு:- 1446 பஹல தலம்பொல
கிராமம்:-மகுல்லபொகுன
இடத்தின் பெயர்:- மயானம்
எல்லைகள்:-
வடக்கு : காணித்துண்டு இல. 19 ஐ
கிழக்கு : காணித்துண்டு இல. 19 ஐ, 19 ஐ$^{3}$ , 19 ஐ.
தெற்கு : காணித்துண்டு இல. 19 ஐ
மேற்கு: காணித்துண்டு இல. 19 ஐ
பரப்பளவு: 0.215 ஹெக்டயார் நிலப்பரப்பு

### பிங்கிரிய பிரதேச சபை

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயான, தனியார் மயான சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உட் பிரிவின் படி மடிகே வெல்லன்கிரிய மயானத்தைப் பற்றிய அறிவித்தல்*

பிங்கிரிய பிரதேச சபையின் அதிகார எல்லை வரம்புக்குட்பட்ட மடிகே வெல்லன்கிரிய கிராமத்தில் அமைந்துள்ளதும் இ.கி.நி.அ.ப. இல. 1394 களத்தால் 01 இல் விபரிக்கப்பட்டதுமான துண்டு 77எ இல் குறிக்கப்படும் மயானத்தின் விபரம்.

#### அட்டவணை

இடம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராம அலுவலர் பிரிவு:- 1456 கெட்டுலாவ
கிராமம்:-மடிகே வெல்லன்கிரிய
இடத்தின் பெயர்:- மயானம்

எல்லைகள்:-
வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 60 உம், 62 உம்
கிழக்கு : காணித்துண்டு இல.60
தெற்கு : காணித்துண்டு இல. 60
மேற்கு : காணித்துண்டு இல. 60
பரப்பளவு: 0.152 ஹெக்டயார் நிலப்பரப்பு

### பிங்கிரிய பிரதேச சபை

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது மயான, தனியார் மயான சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உட் பிரிவின் படி இ/கீன்பன்னாவ மயானத்தைப் பற்றிய அறிவித்தல்*

பிங்கிரிய பிரதேச சபையின் அதிகார எல்லை வரம்புக்குட்பட்ட இ/கீன் பன்னாவ கிராமத்தில் அமைந்துள்ளதும் இ.கி.நி.அ.ப. இல. 2140 களத்தால் 01 இல் விபரிக்கப்பட்டதுமான துண்டு 04 ஏ ஆல் குறிக்கப்படும் மயானத்தின் விபரம்.

#### அட்டவணை

இடம் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராம அலுவலர் பிரிவு:- 1481 கீன்பன்னாவ
கிராமம்:-இ/கீன்பன்னாவ
இடத்தின் பெயர்:- மயானம்

எல்லைகள்:-
வடக்கு : காணித்துண்டு இல.4 சீ
கிழக்கு : காணித்துண்டு இல. 4சீ
தெற்கு : காணித்துண்டு இல. 04 பீ
மேற்கு : காணித்துண்டு இல. 03 ம், 02ம்
பரப்பளவு: 0.225 ஹெக்டயார் நிலப்பரப்பு

### பிங்கிரிய பிரதேச சபை

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க இடுகாடு சுடுகாடுகள், கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் தன்வில மயானம் பற்றிய அறிவித்தல்*

பிங்கிரிய பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் தன்வில கிராமத்தில் இ.கி.வ.1405 பக்க 01 இல் மினிபிடிய எனும் காணியின் காணித்துண்டு இலக்கம் 25.

#### அட்டவணை

காணி அமைந்துள்ள பிரதேசச் செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராம அலுவலர் பிரிவு:- 1445 வீரபொக்குண
கிராமம்:- தண்வில
காணியின் பெயர்:- தண்வில மினிபிடிய
எல்லைகள்:-
வடக்கு : காணித்துண்டு இலக்கம் 28
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 28 மற்றும் பிரதேச சபை பாதை
தெற்கு : பிரதேசசபை பாதை மற்றும் வீரபொக்குண கிராம எல்லை 1406
மேற்கு : வீரபொக்குண கிராம எல்லை இ.கி.வ. 1406 மற்றும் காணித்துண்டு இலக்கம் 28
காணியின் விஸ்தீரணம்: 0.223 ஹெக்டயார் நிலப்பரப்பு

### பிங்கிரிய பிரதேச சபை

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க இடுகாடு சுடுகாடுகள், கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் பண்டாரிகல்கொடை மயானம் பற்றிய அறிவித்தல்*

பிங்கிரிய பிரதேச அதிகார பிரதேசத்தின் பண்டாரிகல்கொடை கிராமத்தில் இ.கி.வ.1382 பக்க இலக்கம் 01 இல் மினிபிடிய எனும் காணியின் காணித்துண்டு இலக்கம் 01 F

#### அட்டவணை

காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராம அலுவலர் பிரிவு:- 1444 பண்டாரிகல்கொடை
கிராமம்:-பண்டாரிகல்கொடை
காணியின் பெயர்:- பண்டாரிகல்கொடை மினிபிடிய
எல்லைகள்:-
வடக்கு : காணித்துண்டு இலக்கம் 144
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 144 மற்றும் பிரதேச சபை பாதை
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 144 மற்றும் பிரதேச சபை பாதை
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 144
காணியின் விஸ்தீரணம்: 0.245 ஹெக்டயார் நிலப்பரப்பு

### பிங்கிரிய பிரதேச சபை

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க இடுகாடு சுடுகாடுகள், கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் கொஸ்கஹகொடை மயானம் பற்றிய அறிவித்தல்*

பிங்கிரிய பிரதேச அதிகார பிரதேசத்தின் கொஸ்கஹகொடை கிராமத்தில் இ.கி.வ.1379 பக்க இலக்கம் 16 இல் பொக்குண கொடகாவமூக்கலான எனும் காணியின் காணித்துண்டு இலக்கம் 103

#### அட்டவணை

காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராம அலுவலர் பிரிவு:- 1443 மானலேம்புவ
கிராமம்:-கொஸ்கஹகொடை
காணியின் பெயர்:- பொக்குணகொடகாவமூக்கலான (மினிபிடிய)

எல்லைகள்:-
வடக்கு : இ.கி.வ. 1594 தண்வில கிராமம்
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 16 1/3
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 104
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 104 மற்றும் தண்வில கிராமம்
காணியின் விஸ்தீரணம்: 0.315 ஹெக்டயார் நிலப்பரப்பு

**பிங்கிரிய பிரதேச சபை**

1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க இடுகாடு சுடுகாடுகள், கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் ப/கோண்கதவளை மயானம் பற்றிய அறிவித்தல்

பிங்கிரிய பிரதேச அதிகார பிரதேசத்தின் ப/கோண்கதவளை கிராமத்தில் இ.கி.வ.1387 பக்க இலக்கம் 14 இல் கொழு வெலஹேன்யாய எனும் காணியின் காணித்துண்டு இலக்கம் 89

**அட்டவணை**

காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராம அலுவலர் பிரிவு:- 1448 இ/கோண்கதவளை
கிராமம்:-ப/கோண்கதவளை
காணியின் பெயர்:- கொமுவெவஹேன்யாய (மினிபிடிய)
எல்லைகள்:-
வடக்கு: காணித்துண்டு இலக்கம் 83
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 83
தெற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 90 மற்றும் 21
மேற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 21மற்றும் 88
காணியின் விஸ்தீரணம்: 0.357 ஹெக்டயார் நிலப்பரப்பு

**பிங்கிரிய பிரதேச சபை**

1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க இடுகாடு சுடுகாடுகள், கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் வல்லவை மயானம் பற்றிய அறிவித்தல்

பிங்கிரிய பிரதேச அதிகார பிரதேசத்தின வல்லவை கிராமத்தில் இ.கி.வ.2104பக்க இலக்கம் 03 இல் கறம்பயாயே மினிபிடியே எனும் காணியின் காணித்துண்டு இலக்கம் 51

**அட்டவணை**

காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராம அலுவலர் பிரிவு:- 1429 கோண்கடவளை
கிராமம்:-வல்லவை
காணியின் பெயர்:- கரம்பயாயே மினிபிடிய
எல்லைகள்:-
வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 50 மற்றும் 1 பி.ஏ.
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 1பி.ஏ.
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 1
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 1
காணியின் விஸ்தீரணம்: 0.137 ஹெக்டயார் நிலப்பரப்பு

**பிங்கிரிய பிரதேச சபை**

1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க இடுகாடு சுடுகாடுகள், கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் ஊரபொத்த மயானம் பற்றிய அறிவித்தல்

பிங்கிரிய பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் ஊரபொத்த கிராமத்தில் இ.கி.வ.1424 பக்க இலக்கம் 03 இல் அய்யன் பெருமாகரை எனும் காணியின் காணித்துண்டு இலக்கம் 18 $F^1$

**அட்டவணை**

காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராம அலுவலர் பிரிவு:- 1458 ஊரபொத்த
கிராமம்:-ஊரபொத்த
காணியின் பெயர்:- அய்யன் பெருமாகரை மினிபிடிய
எல்லைகள்:-
வடக்கு : காணித்துண்டு இலக்கம் 144
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 18 F
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 18 F
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 18 $F^2$
காணியின் விஸ்தீரணம்: 0.402 ஹெக்டயார் நிலப்பரப்பு

**பிங்கிரிய பிரதேச சபை**

1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க இடுகாடு சுடுகாடுகள், கட்டளைச் சட்டத்தின் 11 ஆம் அத்தியாயத்தின் 5(1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் வெல்லராவை மயானம் பற்றிய அறிவித்தல்

பிங்கிரிய பிரதேச சபை அதிகார பிரதேசத்தின் வெல்லராவை கிராமத்தில் இ.கி.வ.2001 பக்க இலக்கம் 11 இல் மினிபிடிய எனும் காணியின் காணித்துண்டு இலக்கம் 42

**அட்டவணை**

காணி அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவு:- பிங்கிரிய
கிராம அலுவலர் பிரிவு:- 1468 வெல்லராவை
கிராமம்:-வெல்லராவை
காணியின் பெயர்:- வெல்லராவை மினிபிடிய
எல்லைகள்:-
வடக்கு : காணித்துண்டு இலக்கம் 41
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 44
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 41
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 43
காணியின் விஸ்தீரணம்: 0.703 ஹெக்டயார் நிலப்பரப்பு

4- 265

**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**

குழாய்க் கிணறு அமைத்தலுக்கான அனுமதி - 2014

08/25.02.2014 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் வலிகாமம் வடக்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் குழாய்க்கிணறு அமைப்பதாயின் பிரதேச சபையிடம் முன் அனுமதி பெற்றுச் செயற்படுதல் வேண்டும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சோ. சுகிர்தன்,
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,

பிரதேச சபை அலுவலகம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்),
2014, பெப்புருவரி 25.

4-401/2

---

**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**

கோழி இறைச்சி விற்பனை பற்றிய அறிவித்தல் - 2014

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பரிவின் பிரகாரமும் 23.08.1998 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி பகுதி IV (ஆ) உள்ளூராட்சி இல் வெளியிடப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபையின் துணைவிதிகள் சட்டத்தின் பாகம் II இன் 33 ஆம் பந்தி பகிரங்க சந்தைகளின் கீழ் உள்ளூர் அதிகாரசபைகளிற்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரமும் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 07/25.02.2014 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரமும் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பொதுச்சந்தைகளின் அமைவிடத்திலிருந்த (மல்லாகம் பொதுச்சந்தை அளவெட்டி மலைவேம்படிச்சந்தை, வீமன்காமம் சந்தை, கூத்தன் சீமாச்சந்தை பன்னாலை, இறால் மடம் சந்தை அளவெட்டி வடக்கு) ஒரு கிலோ மீற்றர் சுற்றுவட்டத்தினுள் கோழி இறைச்சி விற்பனை செய்தல் அல்லது நுகர்வோருக்கு கோழிகளை உயிருடன் தனித்தனியாக விற்பனை செய்தல் தடைசெய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படு கின்றது.

சோ. சுகிர்தன்,
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,

பிரதேச சபை அலுவலகம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்),
2014, பெப்புருவரி 25.

4-401/1

---

# நானவித அறிவித்தல்கள்

**ஆரையம்பதி- மண்முனை பிரதேச சபை**

வாகனம் மற்றும் விலங்கு தொடர்பான வரி - 2014

மண்முனை பிரதேச சபை 2013 ஆம் ஆண்டு 12 ஆம் மாதம் 04 ஆந் திகதிய விசேட ஆணையாளரின் 318 ஆம் இலக்கம் கொண்ட பின்வரும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

திருமதி சீ. ஜே.அருள்பிரகாசம்,
செயலாளர்,
மண்முனை பிரதேச சபை.

மண்முனை பிரதேச சபை ,
ஆரையம்பதி.

***தீர்மானம்***

1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 147 (1) ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய குறித்த சட்டத்தின் 148 ஆவது பிரிவின் மற்றும் 4 ஆவது உப பகுதியிலேயே உள்ள நியதிகளின் படி பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி மண்முனை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் பின்வரும் அட்டவணை நிரல் I இல் தரப்பட்டுள்ள வாகனம் அல்லது அமைந்துள்ள விலங்கை தன்வசம் வைத்திருக்கும் ஒருவர் மீது நிரல் II இல் குறிப்பிடப்பட்டுள்ள வரி ஒன்றை 2014 ஆம் ஆண்டுக்கென விதித்து அறவிடுவதென மண்முனை பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

***அட்டவணை***

| நிரல் I<br>விபரம் | நிரல் II<br>கட்டணம்<br>ரூபா ச. |
|---|---|
| 1. மோட்டார் வாகனம், மோட்டார் ட்ரை கார், மோட்டார் லொறி, மோட்டார் சைக்கிள் வண்டில், ஜின் ரிக்ஷோ, அல்லது ட்ரைசைக்கள் அல்லாத ஒவ்வொரு வாகனத்திற்கும் | 25 0 |
| 2. ட்ரைசிக்கிள் அல்லாத பைசிக்கிள், பைசிக்கள் கார் அல்லது பைசிக்கிள்வண்டிலுக்கு | |
| (அ) வர்த்தக நோக்கங்களுக்காக பயன்படுத்துபபடின் | 18 0 |
| (ஆ) வர்த்தக நோக்கம் தவிர்ந்த ஏனைய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படின் | 4 0 |
| ஒவ்வொரு மாட்டு வண்டிக்கும் | 20 0 |
| ஒவ்வொரு கை வண்டிக்கும் | 10 0 |
| ஒவ்வொரு யானைக்கும் | 50 0 |

4-209

## ஆரையம்பதி- மண்முனை பிரதேச சபை

*1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரக்கட்டணம் விதித்தல் - 2014*

*மண்முனை பிரதேச சபை 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதிய விசேட ஆணையாளரின் 323 ஆம் இலக்கம் கொண்ட பின்வரும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது எனவும் 2014 ஆம் ஆண்டுக்காக விதிக்கப்பட்ட சூழல் சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணத்தையும், பரிசோதனைக் கட்டணத்தையும் சூழல் சுற்றாடல் சான்றிதழ் வழங்கும் முன்னர் பிரதேச சபை அலுவலகத்தில் செலுத்தப்படவேண்டும் எனவும் இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.*

*திருமதி சி. ஜே. அருள்பிரகாசம்,*
*செயலாளர்,*
*மண்முனை பிரதேச சபை.*

*மண்முனை பிரதேச சபை அலுவலகம்,*
*ஆரையம்பதி.*

### *தீர்மானம்*

*1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கத்தைக் கொண்டதேசிய சுற்றாடல் சட்டத்தினால் திருத்தி அமைக்கப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்கத்தைக்கொண்ட சுற்றாடல் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் பிரதேச சபைகளுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மண்முனை பிரதேச சபை அதிகார எல்லைக்குள் செய்யப்படுகின்ற ஏதாகினும் ஒரு வியாபாரத்திற்காக அல்லது தொழிலுக்காக சுற்றாடல் உத்தரவுப்பத்திரம் ஒன்றினைப் பெற்றுக்கொள்ள வேண்டி ஒரு நபரிடம் இருந்து பின்வரும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு அனுமதிப்பத்திரக் கட்டணத்தையும், பரிசோதனைக் கட்டணத்தினையும் 2014 ஆம் ஆண்டுக்கென விதித்து அறவிட வேண்டும் எனவும் மேற்சொல்லப்பட்ட கட்டணங்களை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள முன்னர் மண்முனை பிரதேச சபைக்கு செலுத்த வேண்டும் எனவும் மண்முனை பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

### *அட்டவணை*

| நிரல் I விபரம் | நிரல் II கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 1. உரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட கேள்வித் தொகுதிக்கானவிண்ணப்பக் கட்டணம் | 100 0 |
| அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிப்பதற்கான விண்ணப்பப் படிவக் கட்டணம் | 100 0 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1250 0 |
| 2. சுற்றாடல் அனுமதிப்பத்திர பரிசோதனை கட்டணம் | |
| ஆரம்ப முதலீடாக | - |
| ரூபா 100,000.00 வரை | 500 0 |
| ரூபா 100,001.00 இருந்து 200,000.00 வரை | 750 0 |
| ரூபா 200,001.00 இருந்து 500,000.00 வரை | 1500 0 |
| ரூபா 500,001.00 இருந்து 10,00,000.00 இருந்து மேல் | 5000 0 |

4-210

## ஆரையம்பதி- மண்முனை பிரதேச சபை

*முச்சக்கர வண்டித் தரிப்பிடக் கட்டணம் - 2014*

*மண்முனை பிரதேச சபை 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதிய விசேட ஆணையாளரின் 320 ஆம் இலக்கம் கொண்ட பின்வரும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.*

*திருமதி சி.ஜே.அருள்பிரகாசம்,*
*செயலாளர்,*
*மண்முனை பிரதேச சபை.*

*மண்முனை பிரதேச சபை அலுவலகம்,*
*ஆரையம்பதி.*

### *தீர்மானம்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கபிரதேச சபைகள் சட்டத்தின் 154 (1) ஆவது உப பிரிவின் கீழ் மண்முனை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள பிரதேச சபைக்கு சொந்தமான பின்வரும் முச்சக்கரவண்டித் தரிப்பிடங்களில் நிறுத்தி வைக்கப்படும் முச்சக்கர வண்டிகள் மீது பின்வரும் கட்டணங்ளை மண்முனை பிரதேச சபை அறவிடுவது எனவும் இக் கட்டணத்தினை 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தி சபை அனுமதியினை பெறுதல் வேண்டும் எனவும் மண்முனை பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

### *அட்டவணை*

| நிரல் I விபரம் | நிரல் II கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 1. நிரந்தரமாக தரிப்பிடத்தினை பயன்படுத்தும் முச்சக்கர வண்டி ஒன்றுக்கு வருடத்திற்கு | 1000 0 |
| 2. தற்காலிகமாக தரிப்பிடங்களைப் பயன்படுத்தும் முச்சக்கர வண்டி ஒன்றுக்கு நாளுக்கு | 10 0 |

*தரிப்பிடங்கள்*

1. ஆரையம்பதி பொதுச்சந்தை முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
2. ஆரையம்பதி தேவாலய முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
3. ஆரையம்பதி எல்லை வீதி முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
4. ஆரையம்பதி வைத்தியசாலை முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
5. ஆரையம்பதி சிவன் கோவிலடி முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
6. ஆரையம்பதி நான்காம் கட்டை முச்சக்கர வண்டித் தரிப்பிடம்
7. ஆரையம்பதி ஐந்தாம் கட்டை முச்சக்கர வண்டித் தரிப்பிடம்

4-211

### ஆரையம்பதி- மண்முனை பிரதேச சபை

காணி விற்பனை செய்வதன் மீதான வரி விதித்தல் - 2014

மண்முனை பிரதேச சபை 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதிய விசேட ஆணையாளரின் 321 ஆம் இலக்கம் கொண்ட பின்வரும் தீர்மானம் நிறைவேறியுள்ளது என இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

திருமதி C.J.அருள்பிரகாசம்,
செயலாளர்,
மண்முனை பிரதேச சபை.

மண்முனை பிரதேச சபை ,
ஆரையம்பதி.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 154 (1) ஆவது உப பிரிவின் கீழ் மண்முனை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள ஏதும் ஒரு காணியை ஏலதாரர் ஒருவரோ , தரகு முகவரோ அவரது சேவையாளர் அல்லது அவரது பிரதிநிதியோ ஏல விற்பனை மூலமாக அல்லது வேறேதும் முறையில் விற்பனை செய்யும் தருணத்தில் அந்த காணியை விற்று வரவுத் தொகையில் இருந்து ஒரு சதவீதத்திற்கு சமமான வரியொன்றினை மண்முனை பிரதேச சபைக்குச் செலுத்துதல் வேண்டும் என மண்முனை பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

4-212

---

### ஆரையம்பதி- மண்முனை பிரதேச சபை

வாகனத் தரிப்பிடக் கட்டணம் - 2014

மண்முனை பிரதேச சபை 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 04 ஆந் திகதிய விசேட ஆணையாளரின் 319 ஆம் இலக்கம் கொண்ட பின்வரும் தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதனை இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

திருமதி சி.ஜே. அருள்பிரகாசம்,
செயலாளர்,
மண்முனை பிரதேச சபை.

மண்முனை பிரதேச சபை ,
ஆரையம்பதி.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 154 (1) ஆவது உப பிரிவின் கீழ் மண்முனை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள பிரதேச சபையினால் தீர்மானிக்கப் பட்டுள்ள பின்வரும் வாகனத்தரிப்பிடங்களில் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்கள் மீது பின்வரும் கட்டணங்களை மண்முனை பிரதேச சபை அறவிடுவது எனவும் இக் கட்டணத்தினை 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தி சபை அனுமதியினை பெறுதல் வேண்டும் எனவும் மண்முனை பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

தரிப்பிடங்கள்

1. ஆரையம்பதி பொதுச்சந்தை வாகனத் தரிப்பிடம்
2. ஆரையம்பதி சிவன் கோவிலடி வாகனத் தரிப்பிடம்
3. முண்முனைத்துறையடி வாகனத் தரிப்பிடம்

**கட்டணங்கள்**

| | நிரல் I<br>விபரம் | நிரல் II<br>கட்டணம்<br>ரூபா ச. |
|---|---|---|
| 1. | நிரந்தரமாக தரிப்பிடத்தினை பயன்படுத்தும் மினிவான் ஒன்றுக்கு நாளுக்கு | 35 0 |
| 2. | நிரந்தரமாக தரிப்பிடத்தினை பயன்படுத்தும் பேருந்து ஒன்றுக்கு நாளுக்கு | 50 0 |
| 3. | நிரந்தரமாக தரிப்பிடத்தினை பயன்படுத்தும் வாகனம் ஒன்றுக்கு நாளுக்கு | 25 0 |
| 4. | தற்காலிக தரிப்பிடத்தினை பயன்படுத்தும் மினிவான் ஒன்றுக்கு நாளுக்கு | 30 0 |
| 5. | தற்காலிக தரிப்பிடத்தினை பயன்படுத்தும் பேருந்து ஒன்றுக்கு நாளுக்கு | 40 0 |
| 4. | தற்காலிக தரிப்பிடத்தினை பயன்படுத்தும் வாகனம் ஒன்றுக்கு நாளுக்கு | 20 0 |

4-213

---

### ஆரையம்பதி- மண்முனை பிரதேச சபை

நாய்கள் பதிவுக் கட்டளைச்சட்டம் (477 ஆம் அத்தியாயம்) - 2014

ஆரையம்பதி மண்முனை பிரதேச சபை எல்லைக்குள் வளர்க்கப்படும் நாய்களுக்கு, நாய்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் (477 ஆம் அத்தியாயம்) நான்காம் பிரிவின் நியதிகளின்படி 2014 ஆம் ஆண்டிற்கான பதிவுக்கட்டணங்களாக ஆண் நாய் ஒன்றிற்கு 100 ரூபாவாகவும், பெண்நாய் ஒன்றிற்கு 100 ரூபாவாகவும் அறவிடுவதற்கு விதிக்கப்பட்டுள்ளது. இக் கட்டணங்கள் 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக செலுத்தப்படல் வேண்டும் என 04.12.2013 ஆந் திகதிய விசேட ஆணையாளர் தீர்மான இலக்கம் 317 இன் கீழ் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதனை இத்தால் பிரகடனம் செய்கின்றேன். அனுமதிப்பத்திரம் பெற முன் அனைத்து நாய்களுக்கும் தடுப்பூசி போடப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தி தகுதி வாய்ந்த விலங்கு வைத்தியரினால் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

திருமதி சி. ஜே. அருள்பிரகாசம்,
செயலாளர்,
மண்முனை பிரதேச சபை.

மண்முனை பிரதேச சபை ,
ஆரையம்பதி.

4-214

### கண்டி மாநகர சபை

குப்பை கூளங்களுக்கான கட்டண அறவீட்டை பிரகடனப்படுத்தல்

கண்டி மாநகர சபையின் ஆணைச்சட்டத்தின் 272 ஆம் பிரிவின் அதிகாரத்தின் பிரகாரம் கண்டி மாநகரசபையினால் 2002/08/09 ஆந் திகதி நியமிக்கப்பட்ட இலக்கம் 1249 ஆம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி IV ஆம் பிரிவின் பீடை தடை சம்பந்தமான துணைச்சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்படும் அறிவித்தலாகும்.

2013 .11.25 ஆம் திகதி கண்டி மாநகர சபையின் இலக்கம் 8(33)ஆம் சபை அனுமதியின் பிரகாரம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள வியாபார ஸ்தானங்களின் மூலம் வெளியேற்றப்படும் குப்பை கூளங்களுக்காக 2014 ஆம் ஆண்டு தொடக்கம் கீழ்வரும் வரியை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் குப்பை கூளங்கள் என்பதால் கருதப்படுவது சாம்பல், தூசு, கூட்டி வெளியேற்றப்படும் குப்பை கூளங்கள், மலசலக்கழிவுகள், மண், சாணி, திண்மக் கழிவுகள் மற்றும் ஏனைய கழிவுகள் என்பவற்றை குறிப்பிடலாம்.

#### அட்டவணை

| நிரல் I<br>விபரம் | நிரல் II<br>கட்டணம்<br>ரூபா ச. |
|---|---|
| கிலோ 10-15 அளவு தினந்தோறும் வெளியேற்றப்படும் நிறுவனத்திற்கு மாதந்தோறும் | 300 0 |
| கிலோ 15-20 அளவு தினந்தோறும் வெளியேற்றப்படும் நிறுவனத்திற்கு மாதந்தோறும் | 400 0 |
| கிலோ 20-30 அளவு தினந்தோறும் வெளியேற்றப்படும் நிறுவனத்திற்கு மாதந்தோறும் | 600 0 |
| கிலோ 30-50 அளவு தினந்தோறும் வெளியேற்றப்படும் நிறுவனத்திற்கு மாதந்தோறும் | 1000 0 |
| கிலோ 50-100 அளவு தினந்தோறும் வெளியேற்றப்படும் நிறுவனத்திற்கு மாதந்தோறும் | 2000 0 |
| கிலோ 100-150 அளவு தினந்தோறும் வெளியேற்றப்படும் நிறுவனத்திற்கு மாதந்தோறும் | 3000 0 |
| கிலோ 150-200 அளவு தினந்தோறும் வெளியேற்றப்படும் நிறுவனத்திற்கு மாதந்தோறும் | 4000 0 |
| கிலோ 200-300 அளவு தினந்தோறும் வெளியேற்றப்படும் நிறுவனத்திற்கு மாதந்தோறும் | 6000 0 |
| கிலோ 300 ஐ விட அதிகமான அளவு தினந்தோறும் வெளியேற்றப்படும் நிறுவனத்திற்கு மாதந்தோறும் | 7500 0 |

மேற்படி கட்டணங்கள் அனைத்திற்கும் வெட் வரி சேர்க்கப்படும் என மேலும் அறிவித்துக்கொள்கின்றேன்.

சந்தன தென்னகோன்,
மாநகர ஆணையாளர்.

மாநகர சபை அலுவலகம்,
கண்டி.
2014.03.24.

4- 301

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.